தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர்	திருவள்ளுவர் யாண்டு உயஙரு	மலர்
சஅ	ஆனந்த, ஆனி	ரு
	(1974 — ஜூன் — ஜூலை)	

நடை நலம் - 1

புலவர். இ சுந்தரமூர்த்தி, எம். ஏ.,
டிப். மானிடவியல்,
தமிழ் விரிவுரையாளர், திருக்குறள் ஆராய்ச்சிப் பகுதி.
தமிழ்த்துறை,
சென்னைப் பல்கலைக் கழகம்.

1. இலக்கியமும் உணர்த்தும் திறனும்

இலக்கியக் கலை

1. கலைகளில் சிறந்தது இலக்கியக் கலை. உலக வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் அடிப்படையான மொழியின் வழியே தோன்றுவது அது ஓரோ வழி வரலாற்றை மாற்றியமைக்கும் ஆற்றல் பெற்ற இலக்கிய உலகில் என்றும் வாழும் இனிய இலக்கியங்களாகத் திகழ்வன சிலவேயாகும்.

உணர்த்தும் திறன்கள்

2. காலங்களைக் கடந்தும் கருத்துகளைக் கடந்தும் இன்றும் அவை ஏற்றமும் எழிலும் பெற்றுத் திகழ்வதற்குக் காரணம் அவ்விலக்கியங்கள் பெற்றிருக்கின்ற பல்வேறு தனிச் சிறப்பியல்புகளேயாகும். கூறும் கருத்தால் மட்டும் அவை கவின் பெற்றுத் திகழவில்லை. உணர்த்தும் திறத்தாலும் அவை ஒளிபெற்றும் உயிர்பெற்றும் திகழ்கின்றன. கவிதை உணர்வு கூறும் பொருளில் இல்லை; உணர்த்தும் திறத்தில் உண்டு என்பர்.

3, தான் பெற்ற உணர்ச்சிகளைப் பிறரும் பெறுதற்குக் கவிஞன் சில உத்திகளைக் கையாளுகின்றான். கற்பனை, சொல் நயம், ஒலிநயம், யாப்பு அணி அழகுகள், குறிப்பு, சுவைப்

பொருள்கள் போன்றன அத்தகைய உத்திகள். இவற்றுள் சிலவேனும் பொருந்தி விளங்கும் படைப்பையே பலரும் பாராட்டுவர். இத்துணை அழகுத் திறன்கள் அனைத்தையும் இயல்பாகப் பொருத்தி அமைக்கும் கவின் கலையே கவிதைக் கலை.

நடை நலம்

4. இவற்றுள் கவிஞன் எது முதன்மையானது என் றெல்லாம் பகுத்தும் தொகுத்தும் பார்த்து அமைத்தால் அவ னுடைய நடை நலம் பெறுது. அதுபோலவே கவிஞனின் படைப்பில் ஏதேனும் ஒன்றை மட்டும் பிரித்து இதுதான் 'நடைச் சிறப்பு' என்று நாம் தனியாகவும் எடுத்துரைக்க இய லாது. இத்தகைய உத்திகள் அனைத்தும் ஒன்றுடன் ஒன்று இணைந்தும் இழைந்தும் விளங்கினால்தான் செய்யுள் நெறி - செய்யுள் நடை நலமுறும்.[1]

2. நடை — சொல்லும் பொருளும்

நடை — சொல்லாட்சி

1. தமிழில் 'நடை' என்பதற்கு 'இயக்கம்' என்ற அடிப் படை ஒருமைப்பாடுடைய பல்வேறு பொருள்கள் உள்ளன.[2] அவற்றுள் ஒன்று எழுதுகின்ற மொழியின் இயல்பைச் சுட்டுவ தாகும். சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேரகராதி 'பாஷை யின் போக்கு' (Style in Language) என்று கூறுகிறது.[3] 'நட' என்பதே எல்லாச் சொற்களுக்கும் பகுதியாக விளங்குகிறது. சொன்னடை, வாக்கிய நடை, செய்யுள் நடை, நூல் நடை என்ற வழக்காறுகளில் இச்சொல் ஆகுபெயர்ப் பொருளிலேயே வருகிறது.

2. தொல்காப்பியரும், வள்ளுவரும், பிறரும் 'நடை' என்னும் சொல்லாட்சியைப் பல்வேறு இடங்களில் எடுத்தாண் டுள்ளனர். தொல்காப்பியரும், பிறரும் ஆண்டுள்ள ஆட்சியை யும் வள்ளுவர் 'சொல்லின் நடை தெரிந்த' என்று கூறுவதையும் கீழே காணலாம்.

'உரைநடை வகையே நான்கென மொழிப'[4]
'ஆசிரிய நடைத்தே வஞ்சி ஏனை
வெண்பா நடைத்தே கலியென மொழிப'[5]
'நாற்பொருள் பயக்கும் நடை நெறித்தாகி,'[6]
'காட்டிய நடைநெறி கடைப் பிடித்திவற்றோடு
கூட்டி உணர்தல் ஆன்றோர் கடனே'[7]

'விருத்தியாகும் விகற்ப நடை பெறுமே' [8]
'நாற்பா நடை தெரிந்த நன்னூற் பெரும்புலவர்' [9]
'எழுத்தசை சீர்தளை அடிதொடை தூக்கோ
டிழுக்கா நடையது யாப்பெனப் படுமே' [10]
'ஆறு வழகினைக் காந்தியென் கின்றதததுதமிழின்
நாலுவிதமாய் நடைபெற் றியலு ...' [11]
'இடை தெரிந்து நன்குணர்ந்து சொல்லுக சொல்லின்
நடை தெரிந்த நன்மையவா' [12]

என வரும் இலக்கண. இலக்கிய ஆட்சிகளில் 'நடை' மொழியின் நடையைச் சுட்டுவதாகவே ஓரளவு கொள்ளலாம்.

நடை நயம் உணர்ந்த சான்றோர்

3. இலக்கியத்தை ஆழ்ந்து பயின்றவர்கள் அதன் சொல் நோக்கையும், பொருள் நோக்கையும், தொடை நோக்கையும், நடை நோக்கையும் கண்டு மகிழ்ந்தனர் என்பதைப் பின்வரும் பாடலாலும் அறியமுடிகிறது. பிள்ளைப் பெருமாளையங்கார் எனப்படும் அழகியமணவாளதாசரின் பாடல்களைச்

'சொல் நோக்கும் பொருள் நோக்கும்
தொடை நோக்கும் நடை நோக்கும்
எந்நோக்கும் காண இலக்கியம் ஆவது'

என்னும் பாடலால் பாராட்டிப் பாடினர் ஒரு பழம்புலவர். [13]

4. 'தெளிதீங்கிளவி' [14], 'தெரிதீங்கிளவி' [15], 'அமிழ்தத் தன்ன அந்தீங்கிளவி' [16], 'செவிநுகர் கனிகள்' [17], 'செஞ் சொற் கவியின்பம்' [18], 'செஞ்சொற்புலவன்' [19], 'அஞ்சொல் நுண் தேர்ச்சிப் புலவர்' [20], 'சொல்வலே வேட்டுவன்' [21], முதலான தனிச்சொற்கள் கவிஞர்கள் நடையமைப்புக்காகச் சொல் லாட்சியை எத்துணையளவு போற்றினர் என்பதையும் நமக்கு இனிது உணர்த்தும்.

5. ஈரடியால் இப்பேருலகை அளந்த வள்ளுவப் பெருந் தகையின் கீழ்வரும் தொடர்களும் நடையமைப்பிற்குச் சொல் லமைப்பு எத்துணை அளவு தேவை என்பதைத் தெற்றெனப் புலப்படுத்துகின்றன.

'எண் பொருளவாகச் செலச் சொல்' [22]
'திறன் அறிந்து சொல்லுக' [23]
'வெல்லுஞ்சொல் இன்மை அறிந்து சொல்லுக' [24]

'நிரந்து இனிது சொல்லுக'[25]
'மாசற்ற சில சொல்'[26]
'கற்றதுணர விரித்துரை'[27]
'கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல்'[28]
'சொல்லின் தொகையறிந்த தூய்மையவர்'[29]
'ஆராய்ந்த சொல்வன்மை'[30]

இத்தொடர்கள் -'உணர்த்தும் திறன்' கவிஞர்க்கும் ஏனையோருக்கும் எத்துணையளவு இன்றியமையாதது என்பதையும் தெளிவாக்குகின்றன. எனவே எண்ணங்களையும், மனத்தில் எழும் உணர்வுகளையும் வார்த்தைகளால் வடித்துக்கொடுக்கும் கலைத் திறனையே 'நடை' யென்று இயம்பலாம்[31]

நடையின் நோக்கம்

6 திருமணம் செல்வக்கேசவராய முதலியார் அவர்கள் தம் நூலில்,

> "நூனடையாவது நூல் செல்லும் செலவு, நூற்பொருள் செல்லும் செலவு என்பதாம். கானடையின் நோக்கமாவது ஓரிடத்திலிருந்து பிறிதோரிடத்திற்குச் சென்று சேர்தல். நூனடையின் நோக்கமாவது, ஒரு கருத்து ஒருவன் மனத்திலிருந்து பிறனொருவன் மனத்துச் சென்று சேர்தல்"[32]

என்று விளக்குவர்.

'நடை' - பொருள்

7. உரையாசிரியர் இளம்பூரணர்,

'ஆசிரிய நடைத்தே வஞ்சி ஏனை
வெண்பா நடைத்தே கலியென மொழிப'[33]

என்னும் செய்யுளியல் நூற்பாவில் 'நடையென்றது அப்பாக்கள் இயலுந்திறம்' என்றே பொருள் எழுதுவது உளங்கொளத் தக்கது.

8. எனவே எல்லா வகைத் திறன்களும் பொருந்தி நடக்கும் இயல்பினையே நடையெனலாம்.

9. கவியரசர் கம்பரும் சிறந்த பாட்டு எப்படி இருக்க வேண்டும் என்பதை விளக்கியுள்ளார். கோதாவரியாற்றின் தெளிந்த ஒழுக்கத்திற்கு ஒப்புமை கூறி அணிநயம், ஆழ்ந்த

பொருட் சிறப்பு, அகப்பொருள் துறைகள், ஐந்திணை வருணனை முதலியன அமைந்து தெளிவும், குளிர்ந்த ஒழுக்கமும் உடையதாக விளங்குவதே பாட்டு என்றார் கம்பர்.

புவியினுக் கணியாய் ஆன்ற
பொருள்தந்து புலத்திற் றாகி
அவியகத் துறைகள் தாங்கி
ஐந்திணை நெறிய ளாவிக்
கவியுறத் தெளிந்து தண்ணென்று
ஒழுக்கமும் தழுவிச் சான்றோர்
கவியெனக் கிடந்த கோதா
வரியினை வீரர் கண்டார். [34]

10. வடமொழி நூலார் நடையை 'ரீதி' என வழங்குகின்றனர். ஆங்கிலத்தில் நடையென்பதற்கு நேரான சொல் 'STYLE' என்பதாகும். முதன் முதலில் இச்சொல் பண்டைய மக்கள் எழுதுவதற்குப் பயன்படுத்திய எழுதுகோலினையே குறித்தது என்பர்.

11. தமிழ் வடமொழி இலக்கண நூலாரும், இலக்கியத் திறனாய்வாளரும் 'நடையின் இலக்கணம்' குறித்துக் கூறுவதை இனிச் சுருக்கமாகக் காண்போம்.

3. நடையின் இலக்கணம்

விழுமிய நடைக்குரியவை

1. உரிய சொற்கள் உரிய இடங்களில் பொருந்தி நடப்பதே நடை. மொழியில் அழுத்தத்தையும் தெளிவையும் உருவாக்க முயலும் எல்லா வழிவகைகளையும் மொழிநடையியலின்கீழ் அடக்கலாம். இவற்றில் எல்லா மொழிகளிலும் பழமையான மொழியில்கூட - ஊடுருவிச் செல்லும் உருவகங்களும் எல்லா அணி உருவங்களும சொற்றொடர் அமைப்பும் அடங்கும். அடுக்குநிலை, நிறைவு உயர்வு நவிற்சி, உச்சநிலை என்றின்ன உருவங்களை விழுமிய மொழிநடைக்குரியவை என்பர். [36]

வச்சணந்தி மாலை

2. தமிழிலக்கணத்தில் (செய்யுளியலில்) கூறப்பட்ட இலக்கணங்களுள் சிலவும் பிறவும் நடையின் இலக்கணத்திற்கும் பொருந்தி விளங்குவதை நாம் காணமுடியும்.

எடுத்த பொருளினே டோசை யினிதாய்
அடுத்தவைசெஞ் சொல்லாய் அணியும்—தொடுத்த
தொடையும் விளங்க அவைதுதிப்பச் சொல்லின்
இடமுடைய மாமதுர யாப்பு.[37]

என்று வச்சணந்தி மாலை கூறும் இலக்கணத்திலும் ஓசையும், பொருளும், அலங்காரமும், தொடையும் செய்யுளின் அழகுக்கு நடைக்கு - இன்றியமையாத இயல்புகள் என்று கூறும்.

நன்னூல்

3. சொற்களை வீணாக விரியாது சுருங்கி நிற்கச்சொல்லுதல். சுருங்கச் சொல்லினும் பொருளை ஐயமற விளங்கவைத்தல், படிப்போருக்கு இனிமை தரல் நல்ல சொற்களைச் சேர்த்தல். சந்த இன்பம் உடையதாய் இருத்தல். ஆழ்ந்த பொருளினை உள்ளடக்கியிருத்தல், விழுமியது பயத்தல் முதலான பல இயல்புகள் நூலுக்கு அழகென்றார் பவணந்தியார்.[38] இத்திறங்களையே நடையமைப்பிற்குரிய இலக்கணங்களாகவும் நாம் கொள்ளலாம். இவ்வாறே நன்னூலார் கூறும் முப்பத்திரண்டு உத்தி வகைகளும்,[39] பத்து வகைக் குற்றங்களும்[40] இவற்றோடு எண்ணத் தக்கனவாம்.

குன்றக் கூறல், மிகைபடக் கூறல்,
கூறியது கூறல், மாறுகொளக் கூறல்,
வழூஉச்சொற் புணர்த்தல். மயங்க வைத்தல்,
வெற்றெனத் தொடுத்தல், மற்றொன்று விரித்தல்,
சென்று தேய்ந்திறுதல், நின்று பயனின்மை

முதலாய குற்றங்கள் படிப்பவருக்கும், கேட்பவருக்கும் சுவை நலனைத் தாராததலால் இக்குற்றங்களின்றியே தாம் உணர்த்த விரும்பிய கருத்தைப் பிறருக்கும் உணர்த்த வேண்டும் என்பது புலனாம்.

தொல்காப்பியம்

4. நுண்மையும் சுருக்கமும் ஒளியுடைமையும் எண்மையும் என்றிவை விளங்கத் தோன்றிக் குறித்த பொருளை முடித்தற்கு வரூஉம் ஏது நுதலிய முதுமொழி என்ப.[41] என்னும் நூற்பா தொல்காப்பியர் 'முதுமொழி' க்கு வகுத்துள்ள இலக்கணமாகும். இந்நூற்பாவிற்கு உரைவிளக்கம் தந்த பேராசிரியர்,

"கூரியதாய்ச் சுருங்கி விழுமிதா யெளிதாகி இயற்றப்பட்டுக்
குறித்த பொருளொன்றினை முடித்தற்கு வருமாயின்
அங்ஙனம் வந்ததனைப் பொருண் முடித்தற்குக் காரணமாகிய
பொருளினைக் கருதுவது முதுமொழியென்ப புலவர்" [42]

என்று கூறுவர். எளிமை, தெளிவு, நுட்பம், சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல் முதலாய பண்புகளே இங்குஞ் சுட்டப்படுதல் நோக்கத்தக்கது.

5. தொல்காப்பியர் கூறும் அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து. இயைபு. புலன், இழைபு முதலான இயல்புகளுள் சில செய்யுளின் அழகுக்கும் - நடையமைப்பிற்கு உதவும் பான்மையன மெல்லிய சொற்களால் ஒள்ளிய பொருள்மேல் சொல்லப்படுவது அம்மை [43] செய்யுள் சொல்லாகிய திரி சொல்லினல். ஓசை இனியதாக அமைக்கப்படுவது அழகு [44]. இழுமென்ற மெல்லிய சொற்களால் விழுமிய கருத்துகளைக் கூறுவது தோல் [45], இன்னும் தொல்காப்பியர் கூறும் 'வண்ணம்' முதலானவும் நடையமைப்பிற்குக் கூறப்படும் இலக்கணங்களாகக் கொள்ளலாம் [46]

6. எனவே இவற்ருல் வலியுறுத்தப்படும் மூன்று முதன்மையான நடையியல்புகள், சுருக்கமுடைமை, ஓசையினிமை, விழுமிய கருத்து என்பனவாம்.

7. நடை நலமுறுதற்குரிய பண்புகளுள் ஒன்ருன சொல்லாட்சிச் சிறப்பையே இவை வலியுறுத்துகின்றன எனலாம்.

கோவிந்த சதகம்

8, பாவுக்கழகு பொருட்சுவை சொற்சுவை பன்மலர்ப்பூங்
காவுக்கழகு மயிலுங் குயிலுங் கண்டாய் கமலப்
பூவுக்கழகு மணமுந் திருவும் புவிபுரக்கும்
கோவுக்கழகு செங்கோலச் சுதாநந்த கோவிந்தனே. [47]

என்னும் பாடலால் பல்வேறு அழகுகளைக் கூறவந்த நாராயண பாரதியார், பாவிற்கழகு தரும் இயல்புகளாகப் பொருட் சுவையையும் சொற்சுவையையும் கூறுவது உளங்கொளற் குரியது அழகுகளில் தலையாயதாக 'பா அழகை' இங்கு'அவர் கூறுவது உன்னுதற்குரியது.

சொல்லாற்றல்

9. சொற்களின் ஆற்றல் சொல்லுந்தரமன்று. ஊழித்தீப் போல மாந்தரின் உள்ளத்தே பரவி உணர்ச்சித் தீயினை மூட்டும் சொல்லாற்றல் சொற்களுக்கு உண்டு. கிறித்துவ வேதத்தின் மறையில்,

> "முதலில் சொல்லே இருந்தது. அது கடவுளோடு இருந்தது. அதுவே கடவுளாய் இருந்தது" [48]

என்று வரும் கூற்றின் ஆற்றல் சொல்லாற்றலின் சிறப்பை இனிது விளக்குவதாம்.

வள்ளுவரும் பரிமேலழகரும்

10. வள்ளுவர் 'சொல்வன்மை' அதிகாரத்தில் கூறும் கருத்துகள் யாவும் 'உணர்த்தும் திறன்' எத்துணை அளவு நடையில் அமைக்கப்பெற வேண்டும் என்பதற்குக் கூறும் விளக்கங்களாகவே அமைகின்றன. பரிமேலழகர் அவ்வதிகாரத்தில் விளக்கும் கருத்தும் இங்கு ஒப்புநோக்குதற்குரியது. அவர் தம்முடைய உரையில்,

> "அக்குணங்களாவன வழுவின்மை, சுருங்குதல், விளங்குதல், இனிதாதல், விழுப்பயன் தருதல் என்றிவை முதலாயின" [49]

என்று சொல்வன்மையின் இயல்புகளைக் கூறுவர்.

மொழிப் புலமை

11. ஒரு சொல்லின் உரிய பொருளைத் தெரிந்து அச்சொல்லை ஆளுதலே மொழிப் புலவரின் வழியாகும்,

> எப்பொருள் எச்சொலின் எவ்வாறுயர்ந்தோர்
> செப்பினர் அப்படிச் செப்புதல் மரபே [50]

என்பதும் இங்கே எண்ணத் தகும்.

12. புலவர்கள் சொற்களை எங்ஙனம் ஆய்ந்தாய்ந்து பெய்துள்ளனர் என்பதைக் கார்நாற்பது என்னும் நூல் அழகுறக் கூறும்.

> முல்லைக் கொடி மகிழ மொய்குழலார் உண்மகிழ
> மெல்லப் புனல் பொழியும் மின்னெழில்கார் தொல்லைநூல்

வல்லார் உளமகிழத் தீந்தமிழை வார்க்குமே
சொல்லாய்ந்த கூத்தர்கார் சூழ்ந்து.[51]

என்னும் பாடல் 'சொல்லாய்ந்த கூத்தர்' என்று சொற்பயிற்சி மிக்குடையாரைக் கூறும். சொற்சுவையினைத் தாராத நூல் பெருமைக்குரிய நூலாகாது என்று திருவள்ளுவ மாலையி லுள்ள பாடலிலும் பெறப்படுவதும் எண்ணுதற்குரியது.[52] எனவே சொல்லாட்சித் திறனும் நடையழகுக்கு இன்றியமை யாத ஒன்று என்பதும் இதனால் புலனாகும். "பொருட்செறிவுள்ள செஞ்சொற்களால் அமைக்கப்பட்டு இசைக்கப்படுவதே கவிதை" என்று எசரா பவுண்டு (Ezra Pound) கூறுவதும் இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.[53]

வடமொழி ரீதி'

13 வடமொழி இலக்கண நூலார் தம் 'அலங்கார சாஸ் திரங்களில் நடையைப்பற்றி நன்கு ஆய்ந்துள்ளனர், 'ரீதி' என்று இதனை வழங்குவர். கவிதையின் உயிர்நிலை 'ரீதி' என்பர் வாமனர்.[54]

14. ஆங்கிலத்தில் உள்ள Rhythm என்ற சொல்லுங்கூட வடமொழி மூலச்சொல்லிலிருந்துதான் தோன்றியிருக்கவேண்டு மென்று கருதுகின்றனர். 'ரீ' என்றால் 'கதி' என்ற பொருளைத் தரும் ஒழுங்கான முறையில் ஓடுவதற்குத்தான் Rhythm என்று பெயர்[55] என்று கூறுவதும் ஆராயத்தக்கதே.

15 டாக்டர் S, K. டே அவர்கள் Sanskrit Poetics' என்னும் தம் நூலில் 'Style' என்பதனை ரீதி (Riti) என்று கூறுவது எந்த அளவிற்குப் பொருத்தம் என்பதனை விரிவாக ஆராய்ந் துள்ளார்.[56]

16. சொல்லும் பொருளும் காவியத்தின் உடல் என்றும். உவமைபோன்ற அணிகள், மனிதன் தேவைக்கேற்ப அணியும் அணிகலன்கள் போன்றவை என்றும், 'ரீதி' என்பது மனித னுடைய இயல்பு போன்றது என்றும், 'தவனி' அல்லது வியங்கியம் என்ற ஒன்றே காவியத்தில் உயிர் என்றும் ஆனந்த வர்த்தனர் போன்றோர் கருதுவதும் இங்கு உளங்கொளத் தக்கது.[57]

தண்டியலங்காரம் கூறும் செய்யுள் நெறி

17, வடமொழி நூலார் கூறும் ரீதி'யைத் தமிழ்த் தண்டி யலங்கார நூல் வைதருப்ப, கௌட நெறிகள் என்னும் இரு

வகையாகப் பகுத்துக் கூறுகிறது. செய்யுளின் நடைநலம் அறிதற்கு இதனையும் சுருக்கமாகக் காண்பது இன்றியமையாத தாகும்.

செறிவே, தெளிவே, சமநிலை இன்பம்
ஒழுகிசை, உதாரம், உய்த்தலில் பொருண்மை
காந்தம், வலி, சமாதி யென்றுங்கு
ஆய்ந்த ஈரைங் குணனும் உயிரா
வாய்ந்த வென்ப வைதருப் பம்மே [58]

என்பது தண்டியலங்காரம் கூறும் செய்யுள் இயல்புகளாம். அவற்றின் விளக்கம் பின்வருமாறு :

(1) பாடலில் நெகிழ்ந்த ஓசையின்றிச் சொற்கள்
ஒன்றேடொன்று இறுகச்செறிந்து வருவது - செறிவு. [59]

(2) பாடலைப் படித்த அளவிலேயே பொருள்
எளிதில் விளங்குவது - தெளிவு [60]

(3) வன்மை, மென்மை, இடைமை என
மூவினமும் தம்முள் கலந்து வருவது - சமநிலை. [61]

(4) சொல்லினலும், பொருளினலும் பொருளைச்
சுவைபடத் தொடுப்பது - இன்பம். [62]

(5) வெறுக்கத்தகும் இன்ன இசையின்றி
வரத் தொடுப்பது - ஒழுகிசை. [63]

(6) பாடலிலுள்ள வெளிப்படையான பொருளேயன்றிக்
குறிப்பாகச் சிறப்பானதொரு பொருள் தோன்றப்
பாடுவது - உதாரம். [64]

(7) கருதிய பொருளை விளக்குதற்குரிய விரிக்கும் சொல்லைச் செய்யுளுள்ளே உடையதாய்ப் பிறிது மொழி கூட்டி யுரைக்கும் இயல்பின்றி வரத் தொடுப்பது - உய்த்தலில் பொருண்மை. [65]

(8) உலகநடை இறவாமல் புகழ்வது - காந்தம். [66]

(9) தொகைச் சொற்கள் மிக்குவருவது - வலி. [67]

(10) முக்கியப் பொருளின் வினையை ஒப்புடைப்
பொருள்மேல் தந்து புணர்ந்து உரைப்பது - சமாதி [68]

18. இத்தகைய பத்து நெறிகளால் செய்யுள் அமைவதில் கௌடருக்கும், வைதருப்பருக்குமிடையே கருத்து வேறுபாடுகளும் உண்டு [69] இவையேயன்றி உவமை, உருவகங்களும், சொல்லணிகளும் நடைநலத்திற்குத் துணை புரிவனவாகவும் அமைகின்றன.

திறனாய்வாளர் கண்ட நடைநலம்

19. மேலைநாட்டு இலக்கியத் திறனாய்வாளர்கள் அனைவரும் 'நடையினை' எழுதும் ஆசிரியரின் இயல்போடேயே பெரும்பாலும் இணைத்துப் பேசுகின்றனர்[70] கவிஞருடைய நடை அவருடைய உள்ளத் தெளிவையும், கலைச்சுவைகளில் திளைத்த அவருடைய பண்பையும் புலப்படுத்தும்[71] என்பர்.

20. நடை என்பது ஆசிரியரின் தன்மையை வெளிப்படுத்தும் மொழி.[72] உள்ளத்தின் திட்பம் நடையின் திட்பமாகும்; உள்ளத்தின் தெளிவு நடையின் தெளிவாகும். ஆசிரியரின் குழப்பமும், சிக்கலும் அவருடைய நடையிலும் தென்படும் என்பர். எனவே ஆசிரியரின் நடையே அவருடைய இயல்பைக் காட்டும் உரைகல் என்று கூறுவர்[73] நடை ஆசிரியருடைய உள்ளத்தின் சொல்லோவியம் (Style is the mental picture of the man who writes) என்னும் குணத்தை அறியுங்கலை. (Physiognomy of the mind)[74] என்றுங் கூறுவர்.

21. ஆசிரியர்கள் பண்படுத்திப் பண்படுத்திப் பயன்படுத்தும் சொற்களாலும், அடைமொழிகளாலுமே நடையின் இயல்பினை அறிந்துகொள்ள முடிகிறது என்பது பொதுவாக அவர்களுடைய கொள்கையாகும் சொற்கள் எண்ணத்தின் கருவிகள். எத்துணை அளவு அவை கூர்மையாகவும், திட்பமாகவும், மழுங்காமலும் இருக்கின்றனவோ அத்துணை அளவு எண்ணத்தின் வெளிப்பாடும் நுட்பமாகவும் திறனுடையதாகவும் விளங்கும். நுட்பம் (Accuracy) எளிமை (ease) நயம் (Grace) என்னும் மூவகைப் பண்புகளே நல்ல நடையின் இயல்புகள் என்பர் சாப்மென்[75] (Chapman).

நடை வேறுபாடு

22. ஆசிரியர் (Author). காலம் (Age). நோக்கம் (Purpose) கருத்து (Theme), இடம் (Geography), மக்கள் (Audience) முதலியவற்றால் நடையின் தன்மையும் வேறுபடும்.[76] சங்க காலப் புலவர் ஒருவரின் நடைக்கும், இன்றைய புலவர் ஒருவரின் நடைக்கும் மாற்றமிருப்பது தெளிவாம். காலம், நோக்கம், கருத்து, இடம், மக்கள் முதறியவற்றின் இடையீடுகளால் அவர்களுடைய நடையும் மாற்றமுறும் 'அகவற்பா' பயின்று வந்த சங்க காலமும், 'விருத்தப்பா' மிகுதியும் வழங்கிய இடைக்காலமும், மறுமலர்ச்சித் தமிழ்நடை காணும் இக்காலமும் காலத்தால் நடையியல்பும் வேறுபடும் என்பதைத் தெற்றெனப் புல

ளுக்குகின்றன. இவவாறே தான் கூற விழையும் நோக்கம், கருத்து ஆகியன கருதியும் நடையமைப்பில் மாற்றம் ஏற்படலாம் இடத்திற்கேற்றவாறும், தமக்கு முன் உள்ள மக்க ளுடைய கொள்ளும் திறத்திற்கேற்றவாறும் உணர்த்தும் கலைத்திறனும் அமைதல் இயல்பேயாம். எனவே இதனுலும் நடையமைப்பும், திறனும் வேறுபடும் என்பதும் உண்மையே,

23 இங்ஙனம் நடை வேறுபடுதற்குரிய, காரணங்களையும், நடை வகைகளையும் தனியாகவும் விரிவாகவும் ஆராய்தல் தக்கதாம்.

4. முடிவுரை

இலக்கியக் கலையின் உயிரும் - உள்ளமும்

1. இலக்கியக் கலையின் உயிர் கவிதைக் கலை: நீல வானத்தை அணிசெய்யும் ஞாயிறும் திங்களும் போல இலக்கிய வானத்தை எழில் செய்யும் இருபெருஞ் சுடர்கள் கட்டுரையும் கவிதையும் என்பர் அறிஞர் பெருமக்கள். [77]

செய்யுள்

2. இதுகாறும் கூறப்பெற்ற நடையிலக்கணங்கள் அனைத்தும் செய்யுளுக்கே எனினும் இவற்றுள் பலவும் உரை நடைக்கும் பொருந்தி வருவனவாம்.

சிறப்பாக உணர்ச்சியும், கற்பனையும் வடிவமும் செய்யுளுக்கு மேலும் பொலிவைம் வலிவையும் அளிக்கின்றன. [78] யாப்பிலக் கணம் ஒன்றே செய்யுளையும், உரை நடையையும் வேறுபடுத்து கிறது உரை நடையினைக் காட்டிலும் செய்யுள் உள்ளத்தைக் கொள்ளைகொள்வதற்குக் காரணம் அதன் வடிவமைப்பே,

> ''விஷயத்தை ஜடத்தன்மையிலிருந்து விடுதலை அளிக்கவே யாப்பு தோன்றியது ஸிதாரின் தந்திகள் கட்டுண்டு (முடக்கப்பட்டு) உள்ளனவே தவிர, அதன் தந்தியி லிருந்து இசை வெளிப்படுகிறது. யாப்பு தந்திகள் சுருதி கூட்டிய ஸிதார் போன்றது. சொற்களின் உள்ளத்துள் அடங்கி இருக்கும் இசையை அது வெளிப்படுத்திய வண்ணம் இருக்கிறது. வில்லுக்கு அது நாண் போன்றது சொல்லை அது அம்புகள்போல் குறியின் மையத்துள் படும்படி வீசுகிறது''

என்னும் வங்க மகாகவி தாகூரின் கருத்து இங்கு எண்ணுதற் குரியது. [79]

உரைநடை

3 செய்யுளில் எதுகை மோனைகளோடு சீர்களின் இயைபும் சந்தவின்பம் தருவது போலவே உரைநடையிலும் சந்தவின்பம் தரும் கூறுகள் உண்டு எதுகை, மோனை ஏற்ற அளவில் வருவதும். குறில், நெடிகள் இடத்திற்கேற்ப அளவுபட வருதலும் வல்லினம், மெல்லினம் முதலியன விரவி வருதலும், இன்றியமையாத சந்திகளை மாத்திரம் அமைத்து இசையறுப்பதும் இதனுடைய கூறுகள் எனலாம். இரட்டைக்கிளவி, அடுக்குத் தொடர், மீமிசை, மடக்கு, சிலேடை, சொற்பின் வருநிலை, விரோத அணி முதலியவற்றால் சொல்லின்பம் பெறவைப்பதும் இங்கே உளங்கொளத்தக்கது

குறிப்புகள்

1 Cleanth Brooks, Robert Penn Warten. Fundamentals of Good Writing, p. 332.

2 'நடை' என்பதற்குத் தமிழ்ப் பேரகராதி தரும் 22 பொருள்கள், (1) காலாற் செல்கை, (2) கிரகம் முதலியவற்றின் கதி. (3) பிரயாணம். (4) அடிவைக்கும் கதி. (5) வழி. (6) வாசல். (7) இடைகழி (8) கப்பலேறும் வழி. (9) ஒழுக்கம். (10) வழக்கம். (11) பாஷையின் போக்கு. (12) வாசிப்பினோட்டம். (13) இயல்பு. (14) அடி. (15) கூத்து. (16) தொழில். (17) செல்வம். (18) ஒழுக்க நூல். (19) நித்திய பூசை. (20) கோயில். (21) தடவை. (22) நீண்ட நாள். குறிப்பு:—'நடை' என்னும் சொல்லினை அடியாகக்கொண்டே 57 சொற்கள் தமிழ்ப் பேரகராதியில் குறிக்கப்பட்டுள்ளன.

3 தமிழ்ப் பேரகராதி, தொகுதி 4, பக். 2145.

4 தொல், செய்யு. 475.

5 தொல் செய் 143.

6 தண்டி 8.

7 தண்டி. 26.

8 நன்னூல் 4.

9 யாப். விருத்தி, ஒழிபு இயல், பக். 379

10 யாப்பருங்கலம் 1.

11 வீரசோழியம், அலங். 149.
12 குறள் 712
13 திருவரங்கக் கலம்பகம், சிறப்புப் பாயிரச் செய்யுள்.
14 குறுந்தொகை 250
15 நற்றிணை 164.
16 குறுந்தொகை 206 அகம் 3. நற் 221, ஐங். 490, 499.
17 கம்ப ராமாயணம், பாலகாண்டம். நாட. 51.
18 கம்ப. பாலகாண்டம், மிதிலைக் காட்சி 23.
19 நன்னூல் 23.
20 புறநானூறு 235,
21 புறநானூறு 252 - 5.
22 குறள் 424.
23 குறள் 644.
24 குறள் 645.
25 குறள் 648.
26 குறள் 649.
27 குறள் 650.
28 குறள் 643.
29 குறள் 711.
30 குறள் 682.
31 Alan Warner, A Short Guide to English Style, p. 1.
32 தமிழ் வியாசங்கள், பக் 116,
33 தொல், இளம், செய். 104.
34 கம்ப. ஆரண்ய. சூர்ப்ப. 1

35 Style 1. A sharp, slender pointed instrument of iron or other material used by the ancients for writing by scratching on wax tablets. One end was blunt and smooth, and was used to make erasures. Webster's New Twentieth English Dictionary of the English Language p. 1810,

36 ரெனிவெல்லாக், ஆஸ்டின் வாரன், இலக்கியக் கொள்கை பக் 262

37 வச்சணந்தி மாலை, பக். 30
38 நன்னூல், பாயிரம் 13.
39 ,, ,, 12.
40 ,, ,, 14.
41 தொல். செய் 177.
42 தொல். பொருள், பேரா. நூ. 489 உரை.
43 தொல். பொருள். 536.

44 தொல். பொருள். 537.
45 தொல். பொருள், 539.
46 தொல். பொருள்: 513—534.
47 கோவிந்த சதகம், பாடல் 27.
48 யோவான் 1.1.
49 குறள் 643 உரை.
50 நன்னூல் 388.
51 கார் நாற்பது, சிறப்புப்பாயிரச் செய்யுள்,
52 திருவள்ளுவமாலை, பாடல் 39.
53 கவிதைக் கலை, முதற்பகுதி. பக். 81.
54 Raghavan, Dr. V., Studies on some concepts of the Alamkara Sastra, p. 160.
55 தேசிகன், ரா, ஸ்ரீ., கவிதைக்கலை (முதற் பகுதி) பக், 29.
56 Dae, Dr. S K., Sanskrit Poetics II. P. 115 & 116.
57 திருஞானசம்பந்தம், பெ,, 'தொனிக் கொள்கை' வானொலிப் பேச்சு 11—8—1969.
58 தண்டியலங்காரம், 14.
59 ,, 16.
60 ,, 17.
61 தண்டியலங்காரம், 18
62 ,, 19
63 ,, 20
64 ,, 21
65 ,, 22
66 ,, 23
67 ,, 24
68 ,, 25
69 கௌடருக்கும் வைதருப்பருக்கும் இடையே உள்ள வேறுபாடுகள்.

	வைதருப்ப நெறி	கௌட நெறி
1	செறிவு முதலிய பத்துக் குணங்களையும் ஏற்கும்.	அப்பத்தனுள் சிலவற்றை ஏற்கும்.

2	பெரும்பாலும் மூவினங்க ளால இயன்ற பாடலேயே விரும்புவர்.	ஓரினமான எழுத்துக்களால் இயன்ற பாடலேயே விரும்புவர்,
3	பொருள் எளிதில் விளங் கத்தக்கதாக இருக்கவேண் டும் என்பர்.	பொருள்-அரிதில் புலப்படுதலே விரும்புவர்.
4	வழிமோனை தொகைகள் ஆகியனவெல்லாம் ஓரள விருப்பினும் ஏற்பர்.	அவை மிகுதியாக இருத்தலே விரும்புவர்.
5	ஒன்றினைப் புகழுங்கால் உலகியற்கைக்கு மாறுபட லாகாது என்பர்,	ஒன்றினைப் புகழுங்கால் உல கியற்கையை நோக்காது, எத் துணை உயர்த்தவேண்டுமோ. அத்துணையும் உயர்த்திச் சொல்லலாம் என்பர்.

இருவருக்கும் ஒத்த நெறிகள்

பொருள் காரணமான இன்பம், ஒழுகிசை, உதாரம், உய்த்தலிற் பொருண்மை, சமாதி என்பன. சொல்லின்பம் வலி என்பன கௌடருள் ஒருசாரார் விரும்புவன,

—தண்டியலங்காரம், பக். 29, 30. கு. சுந்தரமூர்த்தி பதிப்பு.

70 Murray, M. Problem of Style, P. 8.

71 Hudson, W. H., An Introduction to the Study of Lit P. 29

72 Fyre. N., Anatomy of Criticism, P 268.

73 Encyclopaedia Brittannica, Vol. II, p. 332

74 Ibid. p. 332.

75 Alan Warner, A Short Guide to English Style. p. 6.

76 Ghosh, Pro. D. N., Principles of Literary Critieism, p 142 - 144.

77 சஞ்சீவி, டாக்டர் ந., ஆராய்ச்சிக் கட்டுரைகள் - முதல் தொகுதி, பக் 150.

78 Alden. Raymond Macdonald, An Introduction to Poetry, p. 128.

79 தாகூர், ரவீந்திரர் கட்டுரைத் திரட்டு (இரண்டாம்தொகுதி) பக். 291.

மேற்கோள் நூல்கள்

இலக்கணம்

1 தண்டியலங்காரம். கு. சுந்தரமூர்த்தி, ப. ஆ., திருப்பனந்தாள், 1967
2 தொல்காப்பியம், பொருள், இள்ம் & பேராசிரியம், கழக வெளியீடு, சென்னை, 1961
3 நன்னூல், ஆறுமுக நாவலர் பதிப்பு, சென்னை, 1963
4 யாப்பருங்கலம், மே வீ வேணுகோபாலப் பிள்ளை, ப, ஆ., அரசினர் சுவடி நூலகம், சென்னை, 1960
5 வச்சணந்திமாலை என்னும் வெண்பாப் பாட்டியலும், வரையறுத்த பாட்டியலும், கழக வெளியீடு, சென்னை, 1936
6 வீரசோழியம், கழகப் பதிப்பு, சென்னை

இலக்கியம்

7 அஷ்டப் பிரபந்தம். பிள்ளைப்பெருமாளையங்கார், வை. மு. சடகோபராமாநுஜாசாரியர் உரை, சென்னை, நள வருடம்
8 ஐங்குறுநூறு. மூன்றுவது பகுதி ஔவை சு. துரைசாமிப் பிள்ளை, அண்ணுமலைப் பல்கலைக் கழக வெளியீடு, 1958
9 கம்ப ராமாயணம், வை. மு கோ, பதிப்பு, சென்னை, ஆரண்ய காண்டம், பாலகாண்டம், 1965
10 கார் நாற்பது. ந, மு, வே, நாட்டார் உரை, கழக வெளியீடு. சென்னை, 1967
11 குறுந்தொகை. உ வே சா. பதிப்பு, சென்னை, 1962
12 கோவிந்த சதகம். நாராயண பாரதியார், மதராஸ் அச்சியந்திரசாலை, இரண்டாம் பதிப்பு, சென்னை, 1917
13 திருக்குறள், வை. மு கோ, பதிப்பு சென்னை, 1965
14 நற்றிணை, பி அ. நாராயணசாமி ஐயர் உரை, கழக வெளியீடு, சென்னை, 1956
15 புறநானூறு. உ. வே, சா, பதிப்பு. சென்னை, 1935

இலக்கிய ஆராய்ச்சி

16 சஞ்சீவி, டாக்டர் ந., ஆராய்ச்சிக் கட்டுரைகள், முதல் தொகுதி, பாரி நிலையம், சென்னை, 1970
17 செல்வக் கேசவராய முதலியார், திருமணம், தமிழ் வியாசங்கள், டயோசிசன் பிரஸ், வேப்பேரி. 1926

18 தாகூர், ரவீந்திரர் கட்டுரைத் திரட்டு, இரண்டாம் தொகுதி. த. நா. குமாரஸ்வாமி தமிழாக்கம், சாகித்திய அக்காதெமி, புதுதில்லி, 1965

19 தேசிகன், ரா ஸ்ரீ., கவிதைக்கலை, முதற்பகுதி. பாரதி தமிழ்ச் சங்கம், கல்கத்தா, 1966

20 ரெனி வெல்லாக், ஆஸ்டின் வாரன், இலக்கியக் கொள்கை, குளோறியா சுந்தரமதி (தமிழாக்கம்) உலகத் தமிழ் ஆராய்ச்சிக் கழக வெளியீடு, பாரி நிலையம், சென்னை, 1966

அகராதி

21 தமிழ்ப் பேரகராதி, தொகுதி 4 சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை, 1963

22 பழந்தமிழ்ச் சொல்லடைவு புதுவை பிரெஞ்சு ஆய்வக வெளியீடு, 1968

23 புதிய ஏற்பாடு. இந்தியா இலங்கை வேதாகமச் சங்கம், பெங்களூர், 1959

ஆங்கில நூல்கள்

1 Alan Warner, A Short Guide to English Style, Oxford University Press, 1964

2 Brooks and Warten, Fundamentals of Good Writing, London, N. D.

3 Dae, Dr. S K., Sanskrit Poetics Part II

4 Encyclopaedia Brittannica, Vol. 21, Chicago, 1969

5 Fyre, N. Anatomy of Criticism

6 Ghosh, Prof. D. N., Principles of Literary Criticism, Kitab Ghar Gwaliar, 1970

7 Hudson, W. H., An Introduction to the Study of Literature Kalyani Publishers, Ludiyana 1971

8 Macdonald, Alden Raymond, An Introduction to Poetry, Henry Holt and Company, New York 1927

9 Murry, M. The problem of Style, Oxford University Press, 1956

10 Raghavan, Dr. V, Studies on Some Concepts of the Alamkara Sastra, The Adayar Library and Research Centre, Madras, 1973

11 Webster's New Twentieth English Dictionary of the English Language, The Publisher's Guild, INC. New York, 1964

SOME IMPORTANT REFERENCES ON STYLE

1 ALANWARNER. A Short Guide to English Style, The English Language Book Society. Oxford University Press, 1964

2 ALONSO, AMADO, The Stylistic Interpretation of Literary Texts, Modern Language Notes, LVII, 1942

3 BARIFIELD. OWEN, Poetic Diction, A Study in meaning London, 1925

4 BONAMY DOBREE, Modern Prose style. Oxford Uni Clarendon Press, 1934

5 BROOKS AND WARREN, Fundamentals of Good Writing London, N. D.

6 CAMB BELL. WILLIAM, G. Form and Style in Thesis Writing. Houghton. Miffin Company. Boston, N. Y. 1969

7 CHATMAN, Literary Style

8 COOPER, LANE, Theories of Style, New York, 1907

9 GRAHAM HOUGH, Style and Stylistics, Routedge and Kegon Paul. New York, 1969

10 HAROLD, C. MARTIN (Ed), Style in Prose Fiction, Columbia University Press, New York, 1959

11 HATZFELD, HELMU. The Language of the Poet, Studies in Philology. XLIII 1946

12 HERBERT READ, English Prose Style. Bell, 1952

13 JOHN CASEY, The Language of Criticism. Nathuen & Co., Ltd.. London. 1966

14 LUCAS. F. L., Style. London. 1958

15 MAPES, E, K, Implications of Some Recent Studies on Style, (Revere de literature comparee) XVIII, 1938 ,

16 MURRAY, J. M., The Problem of Style, Geoffrey Cubmerlege, Oxford University Press, New York, 1956

17 PETER WESTLAND. Literary Appreciation, The English Universities Press Ltd., London, 1966

18 RAGHAVAN, Dr; V., Studies on Some Concepts of the Alamkara Sastra The Adyar Library and Research Centre, Madras, 1973

19 RALEIGH, Sir Walter Style, London, 1897

20 RYLANDS, GEORGE. Worlds and Poetry, London, 1928

21 SCOTT, A. F., Meaning and Style

22 SPITZER, LEO, Linguistics and Literary History, Essays in Stylistics, Princeton, 1948

23 TATE, ALLEND (Ed.), The Language of Poetry, Princeton, 1942

24 THOMAS QUAYLE, Poetic Diction, Methen & Co. Ltd., London, 1924

25 TICHY H J., Effective Writing, John Wiley & Sons, Inc New York, 1967

26 ULLMANN, Stephen, Language and Style. Basil Blackwell Oxford 1964

27 WALTER PATER. Style in Appreciations

28 WIMSATT. WILLIAM, K., The Prose Style of Samuel Johnson, New Haven, 1941

29 WINIFRED NOWOTTNY, The Language Poets Use, University of London, 1968

30 WYLD, H C., Some aspects of the Diction of English Poetry, Oxford, 1933

உ

இயற்கைப் புலவர் கம்பர்

K. சோமசுந்தரம், B. A., B. L., தஞ்சை.

(முன் இதழ் தொடர்ச்சி)

உயிர்களை நிலைநிறுத்தும் அமிழ்தமாகிய நீரினை வழங்கும் மேகம், கம்பரது கருத்தைப் பெரிதும் ஈர்க்கவே, அவர், கடல் நீரில் மேகம் சென்று முகந்து மழையாய்ப் பொழிவதை காவியக் கலைக்கண் கொண்டு கண்ட காட்சிகளை அணியுற தன் காவியத்தில் பல வழியில் வருணிப்பாராயினர். இறைக்கும், சூல்கொண்ட மேகத்திற்குமுள்ள தொடர்பினை, கம்பர் நன்குணர்ந்து மேகத்தின் இரு வேறு நிறங்களை உவமையின்வாயிலாக இறைவனின் தன்மையொடு பொருந்த, சிறந்த கற்பனையால் விளக்கியுள்ளார்.

"நீறணிந்த கடவு ணிறத்தலான்
ஆறணிந்து சென்றார் கலிமேய்ந்தகிற்
சேறணிந்த முலைத்திரு மங்கைதன்
வீறணிந்த வன்மேனி யின்மீண்டதே"

வெண்மேகங்கள் நீறணிந்த சிவனர் போன்று சென்று கடலை மேய்ந்து, திருமகளின் ஆற்றலை அணிந்த கார்வண்ணன் போன்று மீண்டும் மலைமீது பம்பிப் படர்கின்றன. இவ்வண்ணம் கடல் நீரைப் பருகி வந்த கருமேகம், சிவனரது மாமனராகிய இமயவரசன் இடமாகிய இமயமலையைச் சூழ்ந்து பொருந்தியது மலையின் மகளாகிய ஆறு, கடலைக் கூடி அன்புடன் கலப்பதைக் கண்ட கம்பர், கடலின் மனைவியை ஆறெனக்கொண்டு, கடலுக்கு மலை மாமனராக உறவுகொள்ளும் மரபை ஏற்று, கடலின் மாமனராகிய இமயமலை கதிரவனல் வெம்மையுற்றதென எண்ணி, மேகவடிவாகக் கடல் அம்மலையை மழை நீரால், தாரைதாரையாகச் சொரிந்து குளிப்பாட்டியது, இதனையே,

பம்பி மேகம் பரந்தது பானுவா
னம்பன் மாதுலன் வெம்மையை நண்ணின
னம்பி னுற்றது மென்றகன் குன்றின்மே
லிம்பர் வாரி யெழுந்தது போன்றதே ,

எனக் கம்பர் நமக்கு திரைப்படக் காட்சிபோல் காட்டியுள்ளார்.

கடல் நீரை மேகம் கொள்ளும் நீர்மையினையும், மழை நீர்த் துளிகளை தாரைதாரையாகச் சொரிந்த நேர்மையினையும் கண்டு மகிழ்ந்த கம்பர், தன் கற்பனைத் திறனால் மழை பொழியும் காட்சியினைப் பின்வருமாறு

புள்ளி மால்வரை பொன்னென நோக்கிவான்
வெள்ளி வீழிடை வீழ்த்தெனத் தாரைக
ளுள்ளி யுள்ள வெலாமுவந் தீயுமவ்
வள்ளி யோரின் வழங்கின மேகமே.

என மொழிவாராயினர். இமயத்துமேல் மேகம் பொழியும் மழைத் தாரைகள், பொன்னிறம் வாய்ந்த அம்மலையிடத்துள்ள பொன்னைத் தோண்டி யெடுக்க வானவர் வெள்ளிக் கம்பிகளை வீழ்த்தினாற்போன் றுள்ளனவென்றும். மற்றும் வள்ளல் எவ்வாறு தமது பொருட்செல்வத்தை உலக நிலையறிந்து மன முவந்து வழங்குகின்றாரோ, அவ்வாறு மேகம் தம்மிடமுள்ள நீரை உலகினில் வளம் சிறக்க பொழிகிறதென்றும் கம்பர் கூறி, மழைக்குப் பயன் கருதாக் கொடுத்தல் வினையை சிறப்பின்பாலாக்கிப் பெறவைத்ததும் உய்த்துணரற்பாலது

இவ்வாறு வள்ளலின் வன்மைபோல வானத்து எழிலி நீர் பொழிந்ததென்று கம்பர் கூறி, வள்ளலையும் மேகத்தையும் ஏற்றத் தாழ்விலா ஓரே நிலையில் அமைத்து அவற்றின் இயல்புத் தன்மையினையும் நனியுற விளக்குவாராயினர்.

"மன் கலில் பெருங்கொடை மருவி மண்ணுளோ
ருள்கிய பொருளெலா முதவி யற்றபோ
தெள்கலி லிரவலாக் கீவ தின்மையால்
வெள்கிய மாந்தரின் வெளுத்த மேகமே"

ஈண்டு கொடைப் பெருமைவாய்ந்த வள்ளல் வழங்குவதற்கு பொருள் இல்லாது தீர்ந்த காலத்தே. இரப்போர்க்கு இனி கொடுக்க இயலவில்லையே என வருத்தமேலீட்டாலும் நாணத்தாலும் முகம் வெளுத்துப்போகு மியல்பை, நீருள்ளளவும் பொழிந்து இல்லாதபோது வெளுத்துக் காணப்படும் மேகத்தினிடம், கம்பர் கண்டுணர்த்திய தன்மை உள்ளத்தைக் கவருவதாயிற்று.

உவகைக்கு வளத்தரும் மேகத்து மழைபொழியும் காட்சியை உணர்ச்சி மிகுந்த நிலையில் நல்கிய கம்பர்; அதனை உவமையொன்றால் இயற்கையழகு பொலியுமாறு வீறுடன் திகழக் கூறுவதையும் காண்குவம்.

"ஆயகாலையி னனல்விழித் தார்த்திக லரக்கர்
தீயவார்கணை முதலிய தெருகினப் படைகள்
மேயமால்வரை யொன்றினை வளைத்தன மேகந்
தூயதாரைகள் சொரிவன வாமெனச் சொரிந்தார்"

மேகம் அழியாது நிலைபெற்றிருக்கும் மலையைச் சார்ந்து, மழைத் தாரைகளைப் பொழிதல்போன்று அருட்குண அமைதியில் மலைபோல் விளங்கும் இராமரைச் சூழ்ந்து, அரக்கர்கள், கணைகளைச் சொரிந்தன ரென்றும், அக்கணைகள் தீர்ந்த வழி அன்னார் நீரற்று வெளுத்த மேகத்து நிலையினையுற்று, பின் அகன்றுவிடுவரென்று நயம்பட கம்பர் கற்பித்துக் காட்டுவது அழகுடைத்து. ஒப்புமை நோக்கும் முறையில், கண்ணால் கண்டதை இயற்கையொடு தொடர்புபடுத்தி உள்ளத்தால் தெளிய உணரச் செய்யும் இரசவாத வகை, கம்பருக்குத் தனக்கெனச் சிறப்புற வாய்ந்த தனிக் காப்பிய புலமை ஆற்றலென்று உன்னற்பாலது.

வையகத்தை அகலாகக்கொண்டு அதனில் வார்கடல் நீரை நெய்யாக அமைத்து, மேரு மலையை நெய்யிடையில் திரியாகத் திரித்துவைத்து, மேருவின் முடியில் பொருந்திய வெய்ய கதிரோனை. அத்திரியில் எரியும் விளக்கொளியாக அமைத்து, அவ்விளக்கொளியினின்று மேலே கிளம்பும் புகைப் பகுதியை விண்ணில் தவழ்ந்தேகும் மேகப் படலமாக அமைத்து, கருத்தாழ்ந்த கற்பனை வனப்பால் கம்பர், மண்ணையும் விண்ணையும் ஒன்றுக்கி ஒரு பெரு விளக்கொளியைக் காணவைத்தார். அஃது,

"பையணைப் பஃறலைப் பாந்த ளேந்திய
மொய்ந்நிலத் தகளியின் முழங்குநீர் நெய்யின்
வெய்யவன் விளக்க மாமேருப் பொற்றிரி
மையெடுத் தொத்தது மழைத்த வானமே"

எனப்படும்.

கார்காலத்து கருமேகங்கள் படர வானம் இருண்டதாய இயற்கைத் தன்மையைப் பொருத்தமான பல உபமானங்களைக் கொண்டு கம்பர்,

நஞ்செனின் நளிர்நெடும் கடலின் நங்கையர்
அஞ்சன நயனத்தின் அவிழ்ந்த கூந்தலின்
வஞ்சனை அரக்கர்தம் வடிவிற் செயற்கையின்,
நெஞ்சினின் இருண்டது நீல வானமே",

என தன் கருத்தை முதற்கண் வரையறை செய்துகொண்டு பின்னர் சொற்பொருளோடு நுட்பமாக அமைத்துள்ள நயம் பாராட்டற்பாலது. நஞ்சைப் போலவும், நெடுங்கடலைப் போலவும் நங்கையரது மைவிழிகள் போலவும், வஞ்சனை புரியும் கொடுமன அரக்கரின் கரிய வடிவும் அச்சம் தரும் செயலும் போலவும் நீலவானம் இருண்டதாம். அதுபோது மேகமும் இருண்டு இடித்து மின்னி. வானத்தில் விளங்குதல் இயற்கை இயல்பு.

கார்காலத்தில் தலைமகன் குறித்த பருவம் வந்தும் அவன் வாராமையால், இருண்ட மேகத்தையும் மின்னிய மின்னலையும். இடியையும் கண்ட தலைமகள் கார்காலத்து வருகையை உணர்ந்து அவன் பிரிவிற்கு இரங்கி வருந்தும் வாழ்வியல் முறையையும், புற்றில்வாழ் அரவுகளும் மின்னலைக்கண்டு அஞ்சி நடுங்கித் துடித்து துன்புறுவதையும். இடி முழக்கத்தில் மின்னல் தன் நாக்கை ஒளியுடன் வெளியே நீட்டுதல்போன்றுத் தோன்று வதையும், கம்பர்,

பிரிந்துறை மகளிரும் பிலத்த பாந்தளு
மெரிந்துயிர் நடுங்கிட விரவி யின்கதி
ரரிந்தன வாமென அசனி நாவென
விரிந்தன திசைதொறு மிசையின் மின்னெலாம்''

என்ற பாவில் கற்பனையோடு இயற்கையைத் தீட்டிய திறன் புலன்களின் துணைகொண்டு உணரத்தக்க தொன்றாகும்

தலைவனது வரவை தலைவிக்கு உணர்த்தும் இக்கார்காலம், உணர்வற்று பொய்யுடலாகப் பொருந்திய தலைவிக்குப் பணி செய்யும் வகையில், தலைவனை விரைந்து வரும்படி அழைத்து வந்ததாகவும் கம்பர் புனைந்து கூறியது களிப்பூட்டுவதாகும்.

பொருடரப் போயினர்ப் பிரிந்த பொய்யுடற்
குருடரு தேர்மிசை யுயிர்கொண் டுய்த்தலான்
மருடரு பிரிவினோய் மாசு ணங்கெடக்
கருடனைப் பொருவின கால மாரியே

இதன்கண், கம்பர் கார்கால மழையைக் கருடனாக அமைத்து அது பிரிவு எனக் கூறப்படும் பாம்பை அழித்து பின்னர், தலைமகளினது உயிரையும் மீட்டுக் கொடுத்து ஓம்பி வந்ததையும் கூறியுள்ள நயம் வியந்து மகிழற்பாலது.

வானத்தில் விண்மீன் கூட்டங்கள் அழகிய பந்தர்போலமைந்து மின்னிப் பொலிந்ததைக் கண்ட கம்பர், இராமரது முடிசூட்டு விழாவுக்கு நகரணிகள் சிறப்பாகத் திகழ்வதை மகிழ்ந்துணர்ந்தார். ஆனல், கைகேயியின் சூழ்ச்சியால் அவ்விழா நடைபெருமல் போகவே, விழாப் பந்தரைப் பிரித்தது போன்றுள்ளது விண்மீன்களின் மறைவு.

''விரித்த தண்கதிர் முத்ததாகியிம் மண்ணனைத்து நிழற்றுமேல்
விரித்த பந்தர் பிரித்த தாமென மீனொளித்தது வானமே''

என கற்பனைச் சொல்லோவியம் மூலம். இன்பமும் துன்பமும் கலந்து நிகழும் இயற்கைக் காட்சியின் இயல்பினைப் புகன்றது கருத்தாய்ப் பகுத்தறிதற்பாலது.

காரிருள் எனக் காணுகின்ற இன்மையிலே ஒளிப்பெருக்குள்ளதெனக் காணும் கம்பர், மண்ணக இருளில் சிறந்த பல அழகுகளைக் கண்டு இருளும் ஒளியும் ஒன்றையொன்று விழுங்கும் முயற்சியை வியந்தது ஆய்தற்பாலது கதிரவன் மறைய. செவ்வானம் பரவியதை செஞ்சொற் சித்திரத்தில்,

''மஞ்சார்மலை வாரணம் ஒத்தது, வானின் ஓடும்
வெஞ்சாயை யுடைக்கதிர் அங்கு அதன்மீது பாயும்
பஞ்சானனம் ஒத்தது. மற்றது பாய ஊறும்
செஞ்சோரி எனப் பொலிவுற்றது செக்கர் வானம்''

என கம்பர் அற்புதமாக அமைத்துள்ளார் யானையைப்போன்ற மேகம் சூழ்ந்த மலைமீது வெய்ய கதிரவன் சிங்கத்தைப்போன்று பாய. அதனுல் குருதி வெள்ளம்போல் வழிய செவ்வானம் படர்ந்திருந்தது. அதனைக்கண்டஞ்சிய யானைக் கூட்டம் சிங்கம் உலவிவருவதையறிந்து மலையிடத்தில் ஒளிந்து வெளிவராமல் பதுங்கியிருக்க, பகலவன் மலையில் மறைந்தான். இதனையறிந்த யானைக் கூட்டம் பெருமகிழ்வுற்று வெளிவருவதுபோல் பேரிருள் களிப்புடன் பரவியது. இக்காட்சியினைக் கம்பர்,

''கால்வானகத் தேருடை வெய்யவன் காய்கடுங்கட்
கோன்மாய் கதிர்ப்புல்லுளைக் கொல்சினக் கோளரிம்மா
மேல்பான் மலையிற் புகவீங்கிருள் வேறிருந்த
மால்யானை யீட்டம் மெனவந்து பரந்த தன்றே''

என கதிரவனுக்கும் சிங்கத்திற்கும் ஒப்புமையினையும் இருளுக்கும் யானைக்கும் ஒப்புமையினையும் கண்டு, முயற்சி நோக்கால் கண்டதை கற்பனை அழகுடன் அமைத்து உணர்த்தியது. சுவைத்துக் கற்பவர் உள்ளத்தைக் கவரும் பான்மையது.

இருளுடன் நெஞ்சத்திருளும் குலவி பேயுருக்கொண்டு பெருகிய வேதனை இருளை எவ்வாறு

"இன்னல்செய் இராவணன் இழைத்த தீமைபோல்
துன்னரும் கொடுமனக் கூனி"

இழைத்தாலென்பதைக் கம்பர் வெகு அழகாக

"மந்தரை யுரையெனுங் கடுவின் மட்கிய
சிந்தையி னிருண்டது செம்மை நீங்கியே"

எனச் செப்பியுள்ளார். கைகேயியின் உள்ளத்தொளி கதிரவன் ஒளிபோன்றிருந்ததென்றும், மந்தரையின் நஞ்சனைய தீய உரை கரியாய் அவளது உள்ளத்தில் உறைந்து நிற்க, அவளது சிந்தையில் இருள் புகுந்து இருண்டதென்றும், கம்பர் குறிப்பாகக் காட்டி மந்தரையின் உரையால் கைகேயியின் கொடுஞ் செயலுக்குக் காரணமாய மனமாற்றமும், கதிரவன் செல்கையால் இருளின் தோற்றமும் வந்துற்ற வகையினையும் விளக்கியுள்ளார். மற்றும் அறிவொளி பெறுதும், அன்பும் அருளும் குன்றிய மூடர்கள் மனமும் எண்ணமும் போல கருமையுடையதாயிருந்தது இருள் என

"பொருடெங்கில் கேள்விச் சுடர்புக்கு வழங்கலின்றிக்
குருடீங்கி தென்னக் குறிக்கொண்டு கண்ணோட்டங் குன்றி
யருடீர்ந்த நெஞ்சிற் கரிதென்பதவ் வந்தகாரம்"

கம்பர் கூறி, கல்வி கேள்வி யறிவில்லா அறியாமை இருளைப் பழியெனக் கருதுவர்.

ஒளியில் தழையும் உலகம் முழுவதும் கறையிருளில் கவிந்ததைக் கண்ட கம்பருக்கு, சிவனார் யானைத் தோலைப் போர்த்திக் கொண்ட நினைவு உதிக்கலாயிற்று. அண்டமும் அளவிலாத உயிர்களும் ஆகமாகக் கொண்டவனின் அச்செயலாலே, உலகம்

யாவையும் நிறைந்து பரவிய இருளில் போர்த்துள்ள தன்மை கம்பருக்குப் புலனுயிற்று புலனுகவே. கதுவும் மோனக் கற்பனை யின் பொருளினைக் கண்டுகொண்டு வியப்புற்ருர். உடனே அவரது ஆக்கப் பேருள்ளத்திலிருந்து.

"கரித்தமூன் றெயிலுடைக் கணிச்சி வானவ
னெரித்தகூ யந்தண ரிழைத்த யானையை
யுரித்தபே ருரிவையா லுலகுக் கோருறை
புரித்தன னுமெனப் பொலியும் பொற்பதே"

என்ற கவிமலர் உணர்வுப் பொருளொடு முகிழ்த்தது. ஈங்கு இருளின் தன்மையை விளக்கும் மூலம் ஆலம் உண்ட சிவனுள் அனைத்தும் அடக்கமென்பதையும் கற்பனையாலே கம்பர் அற்புதம் செய்துள்ளதைக் காண்க மற்றும் மனத்தைத் துன்புறுத்தும் இருள் கம்பனின் மின்மொழியில் கடுவிடமாகவும் காலனுகவும் விசித்திரமாகத் தோன்றுவதை

ஆலமுலகிற் பரந்ததுவோ? ஆழிகிளர்ந்ததோ வவர்தந்
நீலநிறத்தை எல்லாரும் நினைக்க அதுவாய் நிரம்பியதோ?
காலனிறத்தை யஞ்சனத்திற் கலந்து குழைத்துக் காயத்தின்
மேலும் நிலத்து மெழுகியதோ? விளைக்குமிருளாய் விளைந்ததுவே

என்ற பாட்டு விளக்குகிறது மேலும் கம்பர் வாக்கில் இருள் கருநெருப்பாகிறது. சொல்லாமல் வந்து உறங்கி நில்லாமல் செல்லும் நிலவும் வெண்ணெருப்பாகிறது.

ஓங்கா நின்ற இருளாய் வந்து உலகை விழுங்கி மென்மேலும்
வீங்கா நின்ற கருநெருப்பி னிடையே எழுந்த வெண்ணெருப்பே!

என்பதைப் படிக்கும்போதே உள்ளக் கிளர்ச்சி ஏற்பட்டு இயற்கையின் உண்மையின் அழகு ஒளியால் உள்ளம் பூரிப் பெய்துகிறது அறியப்படும்.

கச்சத் தீவுக் கருத்தரங்கு
ஈரோட்டில் நடைபெறுகிறது

ஈரோடு வரலாற்றுச் சங்கத்தின் சார்பில் 30—6—74 ஞாயிறு அன்று காலை 10 மணிக்கு ஈரோடு பெரியார் மன்றத்தில் கச்சத் தீவு தொடர்பான கருத்தரங்கு ஒன்று நடைபெற உள்ளது.

கருத்தரங்கில் அமைச்சர் பெருமக்களும், சர்வகட்சித் தலைவர்களும். பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும், தமிழ்ச் சான்றோர்களும் புலவர் பெருமக்களும், ஆய்வாளர்களும் கலந்துகொண்டு கருத்து வழங்கவும், கலந்துரையாடவும் உள்ளனர்.

இலங்கை—யாழ்ப்பாணம் உலகத் தமிழ் மாநாட்டில் கலந்து கொண்டவரும் அண்மையில் கச்சத்தீவிலும், இராமநாதபுரம்—மதுரை மாவட்டங்களில் சுற்றுப் பயணம் செய்து கச்சத்தீவு தொடர்பான பல விபரங்களைச் சேகரித்துள்ளவருமான ஈரோடு புலவர் செ. இராசு கருத்தரங்கை முன்னின்று நடத்துகின்றார்.

கருத்தரங்கின்போது கச்சத் தீவு தொடர்பாக சான்றுகள். படங்கள், விளக்கப் படங்கள், செய்திகள் காட்சி அமைக்கப்படும்.

பத்திரிக்கைகள் கச்சத் தீவு தொடர்பாக செய்தி, கட்டுரை வெளிவந்த தம் இதழ்களை அனுப்பி வைக்கலாம் இத் தீவு தொடர்பான சான்றுகள், படங்கள். செய்திகள் இருப்பவர்கள் அவைகளை அனுப்பினால் அவை காட்சியில் வைக்கப்படும், பின் உரியவர்கட்கு அனுப்பிவைக்கப்படும்.

ஆர்வமுடைய எவரும் கட்சி சார்பற்ற இக் கருத்தரங்கு களில் கலந்துகொண்டு செய்திகளைக் கூறலாம் - அல்லது விளக்கம் பெறலாம்.

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

புலவர் செ. இராசு,
அமைப்பாளர்,
கச்சத் தீவு கருத்தரங்கு,
52, பிரப் ரோடு,
ஈரோடு.

நட்பு

கோ. மா. இராசகோபாலன்,
P W Q 364. இ. இரயில்வே காலனி, அயன்புரம், சென்னை - 23

உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு.

ஆடையது நழுவுங்கால் மனிதன் எண்ணி
ஆணையொன்றும் விடுப்பதில்லை கைகளுக்கே!
சோடையின்றிப் பறந்துசென் றுடைபற்றிச்
சுறுசுறுப்பாய் இடையினிலே கட்டுமாப்போல்
பீடையெனும் இடையூறு நண்பனுக்கே
பிறக்குங்கால் அவனிடத்தே வலியச் சென்று
வாடையுறு தென்றலெனத் துன்பந் தீர்த்து
மகிழ்வுதனைக் கூட்டுவதே நண்பர் பண்பாம்!

பரியின்மேல் அழகர்முதல் பலரும் இஃதாய்
பரிந்தளிக்கும் உரையாகும்; உற்று நோக்கில்
கருத்தினிலே பெரியபிழை இல்லை; ஆயின்
கனிவுதரும் பொருளினிலே உண்டு: காண்பீர்!
'பறிகொடுத்த' எனும்பொருளே இழந்த என்னும்
பகர்சொல்லுக் குற்றதுவாம்; 'நழுவ' லென்னல்
உரியபொருள் ஆகாது; நழுவ லென்றே
உரித்தாகின் 'இழிந்த' என இருத்தல் வேண்டும்!

தெள்ளுதமிழ் ஒண்புலவர் செந்நாப் போதார்
சீர்படைப்பில் சொல்லாட்சிப் பிழையு முண்டோ?
கள்ளமிலா 'நழுவ' லெனும் பொருள் விளக்க
கவினுறவே 'இழிந்த' எனுஞ் சொல்லாட் கொண்டார்!
பள்ளமிலா தலைஇழிந்த மயிரின் அன்னர்
பரிதாப நிலைவிளக்கும் குறளைக் காணீர்!
உள்ளசொல் 'இழந்தவனு'க் குரித்தே யான
உண்மைபொருள் 'பறிகொடுத்த' என்ப தேயாம்!

ஆடைபறி கொடுத்தவன்கை விரைந்து சென்றே
அமைவுற்று மானத்தைக் காத்தல் போன்று
நாடுநனி நண்பனுறும் துன்பங் கண்ட
நொடியினிலே விரைந்ததனைத் தீர்த்தல் ஒன்றே
கூடுமிணை நண்பர்தமக் குற்ற பண்பாம்!
குறட்பாடல் தருமுண்மைப் பொருளும் இஃதே!
பீடுறுமோர் குறளுற்ற பொருளு ணர்ந்து
பிறங்காது போற்றிடுவீர்! நன்றே! இன்றே!

குறிப்பு: உடுக்கை — தொழிற் பெயர் எனக்கொண்டு கூறிய முன்னையோர் உரையே நாகரிகமானது.

கால அடிப்படையில் பழமொழிப் பாகுபாடு

பேராசிரியர் வ. பெருமாள், எம் ஏ., பி டி , எம். ஆர். ஏ. எஸ்.
தலைமைத் தமிழ்ப் பேராசிரியர் - தமிழ்த் துறைத் தலைவர்
முதல் நிலைக் கல்லூரி, உரிகம், கோலார் தங்க வயல் (K. G. F)

கருநாடக மாநிலம்

தமிழ் மொழியிலுள்ள ஒவ்வொரு பழமொழியும் எந்தக் காலத்தில் தோன்றியது என்பதை அறுதியிட்டு உறுதியாகக் கூறமுடியாது ஆனாலும் பொதுவாக நாட்டு வரலாற்றுக் கண் கொண்டும், குறிப்பாகத் தமிழ்மொழி - இலக்கியக் கால வரலாற்றுக் கண் கொண்டும் ஆராய்ந்தால் தமிழ்ப் பழமொழி களில் பலவற்றைக் கால அடிப்படையில் பாகுபடுத்திவிடலாம். தமிழ்ப் பழமொழிகளைக் கால அடிப்படையில் கீழ்க்கண்டவாறு நான்கு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம்

1. சங்ககாலம் (கி. மு. 500 முதல் கி. பி 200 வரை.)
2. இடைக்காலம் (கி பி 201 முதல் கி. பி 1700 வரை.)
3. பிற்காலம் (கி. பி 1701 முதல் 1900 வரை)
4. தற்காலம் (இருபதாம் நூற்றாண்டு).

'நெற்றிக் கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே' என்பது நக்கீரர் கூற்றாகத் தோன்றிய சங்க காலப் பழமொழி.

'திகம்பரச் சந்நியாசிக்கு வண்ணான் உறவு ஏன்?' என்னும் பழமொழி கி பி. மூன்றாம் நூற்றாண்டு முதல் கி பி. ஏழாம் நூற்றாண்டு வரை திகம்பரச் சமண முனிவர்கள் தமிழகத்தில் செல்வாக்குடன் வாழ்ந்த காலத்தில் தோன்றியது.

கி. பி. பத்தாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் பட்டினத்தார் (பட்டினத்துப் பிள்ளையார்) அவர் தமக்கை நஞ்சு கலந்த அப்பம் செய்து கொடுத்தார். அடிகள் அதன் உண்மை அறிந்து தமக்கையின் வீட்டுக் கூரையில் எறிந்தார். வீடு தீப் பற்றிக்கொண்டது. அப்போது பட்டினத்தார்,

'தன்வினை தன்னைச் சுடும் ஓட்டப்பம் வீட்டைச் சுடும்' என்று மொழிந்தார். அம்மொழியே பழமொழியாகிவிட்டது. பட்டினத்துப் பிள்ளையார் மகனார் மருதவாணர் கி பி பத்தாம் நூற்றாண்டில் தெளிந்த ஞானத்துடன் உரைத்த

'காதற்ற ஊசியும் வாராதுகாணும் கடைவழிக்கே' என்னும் பொருள்மொழி பழமொழியாகிவிட்டது. இதைப் பட்டினத்தார் கீழ்க்காணும் தம் பாடலில் குறிப்பிட்டுள்ளது இவண் நோக்கத் தக்கது.

'வாதுற்ற திண்புஉயர் அண்ணுமலையர் மலர்ப்பதத்தைப்
போதுற்றுஎப் போதும் புகலுநெஞ்சே இந்தப் பூதலத்தில்
தீதுற்ற செல்வமென் தேடிப்புதைத்த திரவியமென்
காதற்ற ஊசியும் வாராதுகாணும் கடைவழிக்கே'

—பட்டினத்துப் பிள்ளையார் : பொது : 10

கி பி. 12, 13ஆம் நூற்றுண்டுகளில் ஒய்சாளர் ஆட்சியில் தமிழகத்தில் கன்னடம் சிறிது பரவிய காலத்தில் 'ஆனுல் ஆதித்தவாரம் ஆகாவிட்டால் சோமவாரம் என்னும் பழமொழி தோன்றியது'. விசயநகர ஆட்சிக் காலத்திலும், நாயக்க மன்னர்கள் தமிழகத்தில் ஆட்சிபுரிந்த காலத்திலும் (கி. பி 14வது நூற்றுண்டு முதல் 17வது நூற்றுண்டுவரை) தமிழகத்தில் தெலுங்கு பரவியது.

'பேரு பெத்த பேரு தாக நீலு லேது' என்னும் பழமொழி அக்காலத்தில் பிறந்தது. கருநாடக நவாபு தமிழகத்தில் ஆட்சி செலுத்தியபோது அராபிய பாரசீக, உருது, இந்துஸ்தானி ஆகிய மொழிகளிலுள்ள சொற்கள் தமிழில் கலந்தன. அக் காலத்தில்

பணம் இருந்தால் பாட்சா இல்லாவிட்டால் பக்கரி'
'தோற்றுல் பக்கிரி சாயபு; செயித்தால் நவாப் சாகிபு'
'செயித்தால் நவாப் தோற்றுல் பக்கிரி'

முதலிய பழமொழிகள் தோன்றின.

'எத்தனைமுறை சொன்னுலும் பரங்கி வெற்றிலை போட மாட்டான்'

'தண்டசோற்று ராமா குண்டு போட்டால் வாடா'
என்னும் பழமொழிகள் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் தோன்றின.

மொழியியல், சமுதாயயியல், அரசியல், வரலாறு ஆகிய வற்றின் கண்கொண்டு கால உணர்ச்சியுடன் '(Chronological sense) தமிழ்ப் பழமொழியை ஆராய்ந்தால் ஒரே கருத்துள்ள

பழமொழி காலத்திற்கு ஏற்ப மாறிக்கொண்டு வந்த வரலாற்றை நன்கு அறியலாம். கீழ்க்குறிப்பிட்ட மூன்று பழமொழி வடிவங்களை ஆராயலாம்.

ஏழைசொல் அம்பலம் ஏறாது — முற்காலப்பழமொழி
அகதிசொல் அம்பலம் ஏறாது — இடைக்காலப்பழமொழி
நுளையன் சொல் அம்பலம் ஏறாது — பிற்காலப்பழமொழி

வடமொழி தமிழகத்தில் நுழைவதற்கு முன்னர் தோன்றியது 'ஏழை சொல் அம்பலம் ஏறாது' என்னும் முதல் பழமொழி இதில் வடமொழிச் சொல்லோ வடமொழிச் சாயலோ சிறிதும் கிடையாது. இது முழுக்க முழுக்கத் தனித்தமிழ்ப் பழமொழி. இரண்டாவதாக அமைந்துள்ள அகதி சொல் அம்பலம் ஏறாது' என்னும் பழமொழி தமிழகத்தில் வடமொழி நுழைந்த பின்னர் தோன்றிய வடிவமாகும். இது புதுப்பழமொழியன்று. 'ஏழை' என்னும் தனித்தமிழ்ச் சொல்லுக்கு மாறாக 'அகதி' என்னும் வடசொல் இடம் பெற்றிருக்கின்றது. ஆரியர்கள் செல்வாக்கும் வடமொழியின் செல்வாக்கும் தமிழகத்தில் ஓங்கி யிருந்த போது சாதிப் பிரிவு மிக ஆழமாக வேரூன்றியது. பொருளாதார அடிப்படையில் மக்களைச் செல்வர் ஏழை என்று பாகுபடுத்துவதற்கு மாறாகக் குல அடிப்படையில் — குலத் தொழில் அடிப்படையில் — சாதி அடிப்படையில் — சாதித்தொழில் அடிப்படையில் மக்களைப் பாகுபடுத்தும் முறை ஏற்பட்டது.

இன்றைய அரசாங்க ஊழியர்களில் சில வகையினரைக் கடைநிலை ஊழியராகக் கருதுவதைப்போலச் சாதிப் பாகுபாட்டு அடிப்படையில் சமுதாயம் அமைந்த காலத்தில் சிலவகைத் தொழில் புரிந்தவர்கள் கடை நிலையினராக — கீழ் நிலையினராகக் கருதப்பட்டார்கள். அவ்வாறு கருதப்பட்டவர்களில் நுளையரும் (மீனவர் / பரதவர் / செம்படவர்) ஒருவகையினர். அதன் பயனாக 'நுளையன் சொல் அம்பலம் ஏறாது' என்னும் பழமொழி வடிவம் தோன்றிற்று. (நுளையன் அறிவானா இரத்தினத்தின் பெருமையை என்னும் பழமொழியும் இங்கு நோக்கத்தக்கது) இங்குப் பழமொழியில் அமைந்துள்ள ஏழை. அகதி, நுளையன் ஆகிய மூன்று சொற்களும் தமிழகத்தின் மொழி வரலாறு, சமுதாய வரலாறு ஆகியவற்றை நன்கு தெளிவுபடுத்துகின்றன. பழமொழி காலக் கண்ணாடியாக விளங்குகின்றது என்பதற்கு இது சான்றாகும்.

(தொடரும்)